[1984 பிப்ரவரி 23

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, என்னுடைய கேள்வியின் நோக்கமே அந்தப் பகுதியில் இந்தக் குறிப்பிட்ட கால கட்டத்தில் நிறைய அடிக் குழாய்கள் போடப்பட்டிருப்பது தான். அப்படிப் போடவேண்டாமென்று சொல்கிறவனல்ல நான். போட வேண்டியதுதான். ஆனால், அதே வேகமும் உற்சாகமும் ஏனைய பகுதிகளிலும் காட்டப்பட வேண்டும் என்ற நோக்கத்தில்தான் நான் கேட்டிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் இவை வறட்சி நிவாரணப் பணியின்கீழ் போடப் பட்டவை என்று சொன்னார்கள். வேறு ஏதாவது திட்டத்தின் கீழ் அங்கே குழாய்கள் போடப்பட்டிருக்கின்றனவா ? பெரிய குளம் நாடாளுமன்ற இடைத் தேர்தல் வந்த நேரத்தில் 100 அடி, 150 அடி தூரத்தில் கூட குழாய்கள் போட்டிருக்கிறார்கள். ஒரே ஊரில் 2, 3 இடங்களிலேகூட போட்டிருக்கிறார்கள். இந்த வேகமும் உற்சாகமும் மற்றப் பகுதிகளிலும் காட்டப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, வறட்சி நிவாரணப் பணியின்கீழ் சென்ற ஆண்டு மட்டும் 22,000—க்கு மேற்பட்ட குழாய்க் கிணறுகளை 46 கோடி ரூபாய் செலவில் போட்டிருக்கிறோம். மக்களுடைய கோரிக்கை, சட்டமன்ற உறுப்பினர்களுடைய விண்ணப்பம், பிரஷர் அவ்வப்போது அமைச்சரிடம் சொல்லக்கூடிய விண்ணப்பம்—இவைகளை எல்லாம் பார்த்து தமிழ்நாடு பூராவும் சீராக எங்கெங்கே அவசரமோ அவசியமோ அங்கங்கே போடுகிறோம்.

திரு. வே. இரா. ஜெயராமன் : தலைவரவர்களே, பெரிய குளம் நாடாளுமன்றத் தொகுதியில் தேவையான கைப்பம்புகள் போடப்பட்டிருக்கின்றனவா ? மேலும் சில கைப்பம்புகள் போட ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே நான் ஏற்கெனவே சொன்னேன். கோரிக்கை வந்து, பிரஷர் ஜாஸ்தியாக வந்து, அங்கே இருக்கின்ற மக்கள் தேவை என்று சொல்லி, அமைச்சருக்கு விண்ணப்பம் வந்து, அது பரிசீலிக்கப்பட்டு, 'வாட்டர் போர்டு சேர்மேன்' ஆம், போடலாம் என்று சொன்னால் போடலாம்.

சென்னை கொத்தவால் சாவடியை வேறிடத்திற்கு மாற்றும் திட்டம்.

146—*வினா 17173 திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை கொத்தவால் சாவடியை வேறிடத்துக்கு மாற்றும் செயற் குறிப்பு எந்த நிலையில் உள்ளது ?

1984 பிப்ரவரி 23]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : சென்னையிலிருந்து 10 கி.மீ. தூரத்தில் உள்ள கோயம்பேட்டில் புதிதாக 230 ஏக்கர் நிலத்தில் அமையவிருக்கும் மொத்த வியாபாரஸ்தலத்திற்கு கொத்தவால் சாவடி மார்க்கெட்டை மாற்றும் செயற் குறிப்பு உள்ளது. இத்திட்டத்திற்குத் தேவையான நிலத்தை கையகப் படுத்தப்பட்டு மேம்படுத்தும் பணிகள் மேற் கொள்ளப்படவிருக் கின்றன. மண் ஆய்வு, நிலத்தடி நீர் ஆய்வு ஆகியவை முடிவடைந்துள்ளன. இத்திட்டம் ரூ. 14.32 கோடி செலவில் ஐந்தாண்டுகளில் முடிவுறலாம் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

ஊத்துக்குளி பேரூராட்சியிலுள்ள அரிசி ஆலைகள்.

147—*வினா 19661 திரு. கு. ரமணி : மாண்புமிகு தொழி லாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், ஊத்துக்குளி பேரூராட்சியில் உள்ள பல அரிசி ஆலைகள் தொழிற்சாலைச் சட்ட விதிகளை நடைமுறையாக்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை ஆலைகள் அப்படி நடக் கின்றன ? அதன் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

(இ) அங்கு பதிவு செய்யப்பட்டுள்ள ஆலைகள் எவ்வளவு ? பதிவு செய்யப்படாதவை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) இது பற்றி குறிப்பாக அரசுக்கு புகார்கள் ஏதும் வரவில்லை. இருப்பினும் தொழிலாளர் துறை அலுவலர்கள் தொழிற்சாலை சட்டம் 1948—ன் கீழ் பதிவு செய்யப்பட்ட அரிசி ஆலைகளை அவ்வப் போது ஆய்வு செய்து அது சமயம் காணப்படும் குறைபாடு களுக்கு நடவடிக்கை மேற்கொள்கிறார்கள்.

(ஆ) ஒன்பது அரிசி ஆலைகள் மீது தொழிற்சாலைகள் சட்ட விதி மீறுதலுக்காக நீதிமன்றத்தில் வழக்கு தொடரப் பட்டுள்ளது.

(இ) 1. பதிவு செய்யப்பட்ட அரிசி ஆலைகள்—33

2. பதிவு செய்யப்படாத அரிசி ஆலைகள்—4

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, அரசுக்கு புகார் வரவில்லை என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இது சம்பந்தமாக பெரியார் மாவட்டத்தி லிருந்து அங்கே இருக்கின்ற சங்கங்கள் அரசுக்கு புகார் செய் திருக்கிறார்கள் என்பது எனக்குக் கிடைத்த விவரங்கள். இருந்த